**திண்டுக்கல் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

( 16 -11-2016 – 20-11-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 15-11-2016

**கடந்த கால வானிலை 11-11-2016 முதல் 14-11-2016 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0.8 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 32-34 |
| குறைந்த படச வெப்பநிலை (செ) | 23-25 |
| மேக மூட்டம் | 5-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 52-75 |
| காற்றின் வேகம்(கி.மீ/மணி) | 6-10 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 20-11-2016 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 16.11.16 | 17.11.16 | 18.11.16 | 19.11.16 | 20.11.16 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 2 | 3 | 2 | 0 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 33 | 33 | 33 | 33 | 33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 24 | 24 | 24 | 24 | 24 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 62 | 62 | 62 | 62 | 62 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 8 | 8 | 8 |
| காற்றின் திசை | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு |

**குறுஞ்செய்தி :**

- அடுத்த மூன்று நாட்களுக்கு (16, 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில்) லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: பருத்தி, மக்காச்சோளம், காய்கறி பயிர்கள், வாழை**

- அடுத்த மூன்று நாட்களுக்கு மழை வருவதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. நிலவும் சூழ்நிலையின் காரணமாக சாறு உறிஞ்சும் பூச்சியின் தாக்குதல் அதிகரிக்கக் கூடும். இதனை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த மஞ்சள் நிறபொறியினை ஏக்கருக்கு 10 இடங்களில் வைத்து கவர்ந்து அழிக்கலாம்.
- மக்காச்சோளம் பயிரிட்டுள்ள விவசாயிகள் தங்கள் பயிருக்கு தேவையான நுண்ணூட்டச் சத்துக்களை வழங்க, ஏக்கருக்கு 10 கிலோ ஜிங்க் சல்பேட் அல்லது 5 கிலோ சிறுதாணிய கலவையினை வைக்கலாம்.
- பருத்தி பயிரிட்டுள்ள விவசாயிகள் ஏக்கருக்கு 25 கிலோ என்ற அளவில் மெக்னீசியம் சல்பேட் நுண்ணூட்ட உரத்தினை அளிக்கலாம்.
- வானம் மேகமூட்டத்துடன் மிதமான ஈரப்பத்துடன் காணப்படுவதால்
- தற்பொழுது நிலவும் மேகமூட்டத்துடன் கூடிய அதிகமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் பருத்தியில் வெள்ளை ஈக்களின் தாக்குதல் தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 100 மிலி/எக்டர் என்ற அளவில் தெளிக்கலாம்.
- தற்போதைய தட்பவெப்ப சூழ்நிலையில் நோய்த் தாக்குதலில் இருந்து கால்நடைகளை பாதுகாக்க தொழுவத்தை சுத்தமாக வைத்திருக்கவும். ஒரு லிட்டர் தண்ணீரில் 1% பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலினை பயன்படுத்தி பால் கறப்பதற்கு முன்னும் பால் கறந்த பின்பும் பசுமாட்டின் மடியை கழுவி விடவும்.